www.Padasalai.Net www.CBSEtips.in

அரசு உயர்நிலைப்பள்ளி --வலையங்குளம், மதுரை -22

அரையாண்டு பொதுத் தேர்வு-மாதிரி வினாத்தாள்

நேரம்: 2.30 மல ஒன்பதாம் வகுப்பு

தமிழ் மதிப்பெண்கள்: 100

பகுதி-I (மதிப்பெண்கள்: 15)

பின் வரும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தேடுத்து எழுதுக. 15*1=15

1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் எழுதப்பட்ட ஆண்டு-------------

அ. 1746 ஆ. 1856 இ. 1996 ஈ.1836

2. *முத்திக் கனியே*-- எனத் தமிழைப் புகழும் நூல்----------------

அ.தமிழ்விடு தூது ஆ. குற்றாலக் குறவஞ்சி இ.சிலப்பதிகாரம் ஈ. தொல்காப்பியம்

3. பெரிய புராணத்தை இயற்றியவர்-----------

அ.செயங்கொண்டார் ஆ.சேக்கிழார் இ.ஒட்டக்கூத்தர் ஈ.கம்பர்

4. நாளிகேரம் என்பதன் பொருள்-----------

அ.செல்வம் ஆ.முயற்சி இ.தென்னை ஈ.ஆலமரம்

5. தமிழர்களின் பண்பாட்டு நிகழ்வுகளில் ஒன்று-------------

அ.ஏறு தழுவுதல் ஆ.பொங்கல் வழிபாடு இ.குலதெய்வ வழிபாடு ஈ.இறை வாழ்த்து

6. தாமரைப் பாதம்-என்பதன் இலக்கணக்குறிப்பு--------------

அ.உருவகம் ஆ. உவமைத்தொகை இ.வினைத்தொகை ஈ.பண்புத்தொகை

7. இணைய வணிகத்தை கண்டுபிடித்தவர்-----------------

அ.பெர்ட்டினான் லப்ஸ் ஆ.ஜேம்ஸ் பிராங்க்ளின் இ. உசேன் முகமது ஈ.மைக்கேல் ஆல்ட்ரிச்

8. இறைவனுக்குப் பாமாலையும் பூமாலையும் சூட்டியவள்--------

அ.ஆண்டாள் ஆ.நக்கண்ணையார் இ. நன்முல்லையார் ஈ.காரைக்காலம்மையார்

9. சொல்லின் முதலில் நிற்கும் உறுப்பு--------------

அ.பகுதி ஆ.விகுதி இ.இடைநிலை ஈ.விகாரம்

10. இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்-----------------

அ.சாவித்திரிபாய் பூலே ஆ.அன்னை தெரசா இ.முத்துலட்சுமி ரெட்டி ஈ.சுசேதா கிருபளானி

பாடலைப் படித்து பின் வரும் வினாக்களுக்கு (12 ,13 ,14 ,15). விடை தருக

"நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்:
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே:
நீரும் நிலனும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்துசினோரே! "

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்----------

அ.புறநானூறு ஆ.அகநானூறு இ.குறுந்தொகை ஈ.ஐங்குறுநூறு

13. இப்பாடலின் ஆசிரியர்----------------

அ.குடபுலவியனார் ஆ.தொல்காப்பியர் இ.நக்கண்ணையார் ஈ.நப்பசலையார்

14. நீரும் நிலமும்--இலக்கணக்குறிப்பு தருக

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

அ.வினைத்தொகை ஆ.எண்ணுமமை இ. முற்றும்மை ஈ. பண்புத்தொகை

15.இப்பாடலில் இடம்பெற்றுள்ள இயைபுச் சொற்கள்------------

அ.கொடுத்தோரே --படைத்திசினோரே ஆ. நீரும் ------நிலனும்

இ.உடம்பும் ---உயிரும் ஈ.உண்டி முதற்றே-- உணவின் பிண்டம்

பகுதி -II ( மதிப்பெண்கள் :18 )

பிரிவு-1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 4*2=8

(வினா எண்-- 21க்கு கட்டாயம் விடையளிக்கவும்)

16. விடைக்கேற்ற வினாக்களை அமைக்க:

அ.சங்குகள் ஈனுகின்ற முட்டைகள் முத்துப்போல் இருக்கின்றன.

ஆ.சோழ நாட்டில் யானைப்படை வலிமையானது.

17. தமிழ்விடு தூது யார்மீது பாடப்பட்டது?

18. பழமணல் மாற்று மின்: புதுமணல் பரப்புமின்-- இடம் சுட்டி பொருள் விளக்குக

19. கூட்டுப் புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக

20. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?

21. *இலர்*-- என முடியும் திருக்குறளை எழுதுக

பிரிவு-2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க

22. அ.பாடம் கற்பித்தான் ஆ.கண்ணா வா! தொடர்களின் வகையைச் சுட்டுக. 5*2=10

பொருத்தமான துணை வினைகளைப் பயன்படுத்துக.

23. அ.மத்தளம் முதலான இசைக்கருவிகள்--------கொண்டிருக்கின்றன.(முழங்கு)

ஆ.வரிகளையுடைய சங்குகளை மக்கள்-------மகிழ்கின்றனர்.(ஊது)

24. எதுகை நயங்களை எடுத்து எழுதுக

" மண்டு புனல் பரந்த வயல் வளர் முதலின் சுருள் விரியக்
கண்டுழவர் பதங்காட்ட களைகளையுங் கடைசியர்கள் "

25. கலைச்சொற்கள் தருக. WATER MANAGEMENT, TROPICAL ZONE

26. இலக்கணக்குறிப்பு தருக. அமையா -----நல்லிசை

27. வேற்றுமை என்றால் என்ன?

28. பார்த்தான்--பகுபத உறுப்பிலக்கணம் தருக

பகுதி-III ( மதிப்பெண்கள்: 18)

பிரிவு- 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடை அளிக்க 2*3=6

29. முழு உருவச் சிற்பங்கள் ---புடைப்புச் சிற்பங்கள் இவ்விரண்டையும் வேறுபடுத்துக

30. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணைய வழி சேவைகளை எழுதுக

31. காலந்தோறும் தமிழ் மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

பிரிவு- 2

www.Padasalai.Net

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடை அளிக்க 2*3=6

(வினா எண் 34-க்கு கட்டாயம் விடையளிக்கவும்).

32. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழாவோடு ஒப்பிடுக

33. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக

34. * காடெல்லாம் *--எனத்துவங்கும் பெரியபுராணப் பாடல். (அல்லது)

*கல்லிடை*- எனத்துவங்கும் இராவண காவியப் பாடல்

பிரிவு -3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடை அளிக்க 2*3=6

35. கூட்டு வினைகள் சிலவற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக

35. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதும் இன்றியமையாமையைச் சான்றுடன் விளக்குக .

36. வஞ்சப்புகழ்ச்சி அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக

பகுதி -IV ( மதிப்பெண்கள்: 25) 5*5=25

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க

37. தூது அனுப்ப தமிழே சிறந்தது தமிழ் விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக

(அல்லது)

பட்ட மரத்தின் வெறும் கனவுகளாக கவிஞர் தமிழ்ஒளி கூறுவன யாவை

38. சுற்றுச்சூழலைப் பேணிக் காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்த உங்கள் பள்ளியை பாராட்டி நடைபெறும் விழாவில் கலந்து கொள்ள வருகை தரும் மாவட்ட கல்வி அலுவலரை வரவேற்று வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக

(அல்லது)

உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ் -தமிழ்- ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகள் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக .

39. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக




(அல்லது)

விளம்பரத்தை செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!

*புத்தகத் திருவிழா*

நாள்: செப்டம்பர் 18 முதல் 28 வரை

இடம்: தமுக்கம் மைதானம் -தல்லாகுளம் .மதுரை

நேரம் :காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

(முதல் நாள் காலை எட்டு மணிக்கு தமிழக கல்வித்துறை அமைச்சர் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர்கள் கூட்டாகத் தொடங்கி வைக்கின்றனர்)

தினந்தோறும் மாலை ஐந்து மணிக்கு மேல் புதிய புத்தகங்களை வெளியிடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரை வீச்சு இடம்பெறும்

பள்ளி தொடர்பான புத்தகங்களுக்கு 10 சதவீதம் கூடுதல் தள்ளுபடி

அனைவரும் வாரீர்! ஆதரவு தாரீர்!. அறிவுத்திறம் பெறுவீர்!.

(அல்லது)

40. *அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்*

இக்குறளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பக்க அளவில் கதை ஒன்றை எழுதுக

(அல்லது)

பின்வரும் பாடலுக்கான பா நயம் பாராட்டுக

பாடல்

ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றோடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றோடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே

தொல்காப்பியர்

41. மழை என்னும் தலைப்பில் எட்டு வரிகளுக்கு குறையாமலும் பன்னிரு வரிகளுக்கு மிகாமலும் உன் சொந்த நடையில் கவிதை ஒன்றினை நயத்துடன் எழுதுக

(அல்லது)

கீழ்க்காணும் பத்தியை மொழிபெயர்த்து எழுதுக

hitting the bottles with the spoon ,Makes them vibrate and produce a sound. the more the bottle vibrates the higher the note will be. the more water in a bottle in vibrates so less water means higher notes.

பகுதி -V. ( மதிப்பெண்கள்: 24) 3*8=24

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடை அளிக்க

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

42. ஏறுதழுவுதல் தமிழரின் அறவியல் என்று போற்றப் படுவதற்கான காரணங்களை விவரிக்க

(அல்லது)

கல்வியில் சிறந்த ஏதேனும் ஐந்து சாதனை பெண்கள் குறித்த செய்திகளை ஒரு பக்க அளவில் எழுதுக

43. இசைக்கு நாடு ,மொழி, இனம் தேவையில்லை என்பதே செய்தி கதை மூலமாக விளக்குக

(அல்லது)

தண்ணீர் கதையை கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக

44. உங்கள் பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற நிகழ்ச்சிகளை திரட்டி தொகுப்புரை தருக

(அல்லது)

பருவ மழையால் சேதமடைந்த சாலைகளைச் செப்பனிட்டுத் தரக்கோரி நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளருக்கு கூட்டு விண்ணப்பம் எழுதுக

வினாத்தாள் வடிவமைப்பு
பா செல்வகுமார்
பட்டதாரி தமிழாசிரியர்
அரசு உயர்நிலைப்பள்ளி
வலையங்குளம், திருப்பரங்குன்றம் வட்டம்
மதுரை 22

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593